Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 131

யாழ்ப்பாணம் ஆனி 9 சபி.ஆண் 29 புதன்கிழமை (23-6-71)

நவநாகரிக
நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன்
ஜுவல்லர்ஸ்
போன் 444
தந்தி: 'இரத்தினம்ஸ்'
50,கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# சோனகதெரு; வில்லூன்றியில் மேணிக்கு ஊரடங்கு உத்தரவு

## பெண்கடத்தல்பற்றி எழுந்துள்ள தகராறு

யாழ்ப்பாணம், புதன்
யாழ்ப்பாணம் சோனகதெருப் பகுதியிலும் வில்லூன்றிப் பகுதியிலும் நேற்றுத் தொடக்கம் மாலை ஆறு மணி முதல் அதிகாலை நான்கு மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

பெண் கடத்தல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து இப்பகுதியில் இரு பிரிவினருக்கிடையே எழுந்துள்ள தகராறு காரணமாக அமைதியை நிலைநாட்டும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாகப் யாழ் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

கடத்தப்பட்டதாகக் கருதப்படும் இளம் பெண்ணும் கடத்தியதாகக் கூறப்படும் இளைஞனும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவு சோனகதெருவில் அமைதியைக் குலைக்க முயன்றதாகக் கருதப்படும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று அங்கு அமைதியை நிலைநாட்டியுள்ளது.

மாலை 6 மணிக்குப் பின்னர் அப்பகுதிகளில் வீதிகளில் செல்வோர் கைது செய்யப்படுவார்களென்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வடபகுதிப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

எழுதுமட்டுவாளில்

## அனாதரவான நிலையில் கிடந்த சடலம்

### கொலை எனச் சந்தேகம்

எழுதுமட்டுவாள், செவ்.
எழுதுமட்டுவாளுக்கு அண்மையில் ஒட்டுவெளி என்ற இடத்தில் இனந்தெரியாத நபர் ஒருவரின் சடலம் அநாதரவான நிலையில் கிடக்கக்காணப்பட்டது. இச்சடலம் இருநாட்களாக இங்கு கிடந்திருக்கலாம் எனநம்பப்படுகிறது. வயல் வெளியில் கிடந்த இச்சடலத்தை ஆடுமாடுகள் மேய்ப்பவர்கள் இருதினங்களாகக் கண்டபோதிலும் குடிவெறியில் யாரோ கிடக்கிறார்கள் என நம்பிப்போய்ப்பார்க்காமல் விட்டதாகவும் பின்னர் இதுபற்றிக் கிராமசேவையாளரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து கிராமசேவையாளர் ஸ்தலத்திற்குச் சென்றுபார்த்துப் பொலிஸுக்கு அறிவித்ததாகவும் தெரிகிறது.

40 வயது மதிக்கத்தக்க மரணமானவர் பச்சைக் கோடுகளையுடைய சாரம் அணிந்திருந்தார். மரணமானவர் யாரென்பது இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இறந்தவரின் உடலில் அடிகாயங்களும் வெட்டுக்காயங்களும் இரத்தக்கறைகளும் காணப்படுவதாகவும்,

(6-ம் பக்கம் பார்க்க)

## பிராந்திய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது

கோட்டை,செவ்வாய்
இலங்கை பிராந்திய அபிவிருத்தித் திட்டத்தின் கீழான முதலாவது அபிவிருத்தித்திட்டம் ஹத்தொமூவ பகுதியிலுள்ள ஹபராதவதொகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கியமுன்னணி அரசாங்கத்தினால் உருவாக்கப்படும் தேசிய அபிவிருத்தித்திட்டங்களுக்கு உள்ளூர் மக்களே தெரிவுசெய்யப் படுவார்கள் என்று இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்த பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில திட்டமிடல் வேலைவாய்ப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளர் ஏச்.ஏ.டி.எஸ். குணசேகரா கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், இதுவரை காலமும் இலங்கையில் திட்டமிடப்பட்ட தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வி அடைந்துள்ளன. இதற்குக் காரணம், நாட்டுமக்களின் அபிலாசைகளைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப திட்டமிடாமையே. இந்த நாட்டிலுள்ள கிராமிய மக்களைக் கலந்தாலோசியாமல், அவர்களின் அபிலாசைகளைத் தெரிந்துகொண்டே தேசிய அபிவிருத்தித்திட்டங்கள் தீட்டப்படவேண்டும் என்று கூறினார்.

## அரசியல் நிர்ணயசபையை தமிழரசார் பகிஷ்கரிப்பரா?

யாழ்ப்பாணம், புதன்
அரசியல் நிர்ணயசபையிலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேற வேண்டுமென்ற தீர்மானத்துக்கு கட்சியின் பொதுச்சபை அங்கீகாரமளித்துவிட்டபோதிலும் அரசியல் நிர்ணயசபையில் அங்கம்வகிக்கும் இதர நான்கு தமிழ்ப் பிரதிநிகளும் வெளியேறுத வரையில் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் மட்டும் வெளியேறுவதால் பயன் ஏதும் கிடைக்குமா என்ற சந்தேகம் கட்சியின் பிரதிநிதிகள் மத்தியில் தோன்றியுள்ளதாக அறியப்படுகிறது.

அரசியல் நிர்ணயசபையில் அங்கம் வகிக்கும் நான்கு தமிழ்ப் பிரதிநிதிகளும் அரசியல் அமைப்பு அடிப்படைத் தீர்மானங்களுக்கு ஆதரவளித்து புதிய அரசியல் அமைப்பையே ஏற்றுக்கொள்ளச் சம்மதமளிக்கத்தயாராக இருக்கும்போது தாங்கள் தமிழ்மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளாக, தமிரசுக்கட்சி உறுப்பினர்கள் மட்டும் [illegible] பகிஷ் [illegible] வெளியேறினால் புதிய அரசியல் அமைப்புக்கு தமிழரசுக்கட்சிதான் எதிர்க்கிறதென்ற பெயர் ஏற்படுமேயன்றி தமிழ் மக்கள் அதை எதிர்த்தார்கள் என்ற பெயர் ஏற்பட இடமிருக்காதென்று தமிழரசுக்கட்சியின் அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்கள் மத்தியில் அபிப்பிராயம் நிலவுவதாகத் தெரிகிறது.

எனவேதான் அரசியல் நிர்ணயசபையிலிருந்து தமிழரசுக்கட்சியினர் வெளியேறுவதற்குப் பொதுச்சபை அங்கீகாரமளித்தாலும் திரு. செல்வநாயகம் கூறும்போசனையைத் தொடர்ந்து வெளியேறுவதற்கு அவகாசம்

(6-ம் பக்கம் பார்க்க)

கந்தளாயில்

## கரும்பு உற்பத்தி அதிகரிப்பு

கோட்டை, செவ்வாய்
கந்தளாயிலுள்ள ஸ்ரீலங்கா கூட்டுத்தாபனம் ஆயிரம் தொன் கரும்பை நாளொன்றுக்குச் சாகுபடி செய்துள்ளது. இதுவரை காலமும் இங்கு செய்யப்பட்ட உற்பத்தியை விட இவ்வுற்பத்தி கூடுதலாகும். முன்னைய ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 500தொன்னிலிருந்து600தொன் வரைகரும்பு சாகுபடி செய்யப்பட்டது.

இந்த அதிக உற்பத்திக்கு கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களினதும், முகாமையாளரினதும் பெருமளவு ஒத்துழைப்பே காரணம் எனச் சொல்லப்படுகிறது.

இப்பொழுது ஸ்ரீலங்கா கூட்டுத்தாபனம் நாளொன்றுக்கு 75 தொன் சீனி உற்பத்தி செய்யப்படுவதாகவும், மிக விரைவில் இந்த உற்பத்தியை 100 தொன்னுக்கு உயர்த்துவதற்கு கூட்டுத்தாபனம் உத்தேசித்திருப்பதாக கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## திருமலைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்

கோட்டை, செவ்
திருகோணமலைத் துறைமுகம் சரக்குகளை துரிதமாக ஏற்றி இறக்குவதற்கு ஏற்ற முறையில் அபிவிருத்தி செய்யப்படவிருக்கிறது. இந்த புதிய திட்டத்தின் கீழ் இரு இறங்குதுறைகள் அமைக்கப்படும் என்று கப்பல் போக்குவரத்து அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பொழுது திருகோணமலைத் துறைமுகத்திற்கு வெளியேயே கப்பல்கள் நங்கூரமிட்டு அக்கப்பல்களிலிருந்து வள்ளங்கள் மூலம் சரக்குகள் கரைக்குக் கொண்டுவரப் படுகின்றன.

கப்பல் போக்குவரத்து அமைச்சின் புதிய திட்டத்தின் கீழ் துறைமுகத்திலுள்ள களஞ்சியங்களிலிருந்தே கப்பல்களுக்கு சரக்குகளை ஏற்றுவதற்கு ஏற்றவகையில் அபிவிருத்தி செய்யப்படும்.

இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை இத்துறைமுகம்மூலமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இத்துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதினால் கொழும்பு துறைமுகத்திலுள்ள நெருக்கடி குறையுமென அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வாகனங்கள் சேர்விஸ் செய்வதற்குரிய இயந்திர தளபாடங்கள் (lift) தேவை. தொடர்பு கொள்ளவும் சென் பீற்றர்ஸ் இன்டஸ்ட்றீஸ், முல்லைத்தீவு. 2499

பிறின்ரிங், ரச்சிங் அனுபவமும் 30 வயதிற்குட்பட்டவரும், ஸ்ருடியோவில் வேலை செய்வதற்கு தேவை. விபரங்களுக்கு: மனேச்சர், லக்கி ஸ்ரோட்டோ, மன்னார். 3189

### விற்பனைக்கு

படிகளுடன் ஐந்து தராசுகள், சாடிகள், ரைப்ரைட்டர், மெக்கானிக் மேசன், தச்சுவேலைச் சாமான்கள். இ. செல்லர், 111, பருத்தித்துறை வீதி நல்லூர் 3196

சாவகச்சேரி-சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கு சமீபமாக மின்சாரவசதியுடன் கூடிய பெரியகல்வீடும் 2 1/2 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஐ சிற்றம்பலம், ஆனந்த நகைமாளிகை சாவகச்சேரி. 3203

### விற்பனைக்கு

காணி:

காணியின் பெயர் தனுவிசப்பாய். பலாலி கிழக்கு பரப்பு 31. 2கிணறு. வீடு, வான்பயிருடன் சமச்செய்கைக்கும் இடமுண்டு. விபரங்களுக்கு: அப்புக்குட்டி தம்பையா, பலாலி கிழக்கு, காங்கேசன்துறை. 3198

தையல் மெஷின்

ஏழு லாச்சிகளுடன் கூடிய கபினெற் மொடல் சிங்கர் தையல் மெஷின். ச. செல்லத்துரை, ஆசிரியர். 131/1, பருத்தித்துறை வீதி லேன், நல்லூர் 3195

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் 166, ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஆ. ச. சங்கரப்பிள்ளை அன்ட் பிறதர் கட்டடத்தின் மேல்மாடியில் அறைகள் வாடகைக்குண்டு. தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3204

---

ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி.ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
**ஜீவநாடி**

---

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன் — லக்ஷ்மி,
நாகேஷ் — ராஜேஸ்
நடித்த
**நவக்கிரகம்**

---

வின்ஸர் — யாழ்ப்பாணம்
காலை 10-30 பி ப. 2-00 மாலை 5-30
ஜி. என். பாலசுப்பிரமணியம்
எம். எஸ். சுப்புலக்ஷ்மி
கிருஷ்ணன் - மதுரம் - துரைராஜ்
நடித்த
**சகுந்தலை**

---

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜி கணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
**பாசமலர்**

இங்ஸ்லி (கொழும்பு) வின்ஸா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா-குமாரி சச்சு
நடித்த
**நிறைகுடம்**

---

THE JAFFNA ACADEMY
CHUNDIKULI.
Phone No. 617

City & Guild's of London Electrical Engineering Practice Classes for the Preliminary, Intermediate and Final Examinations to be held in May 1972. Commence on 25-6-71. Please apply before 24-6-71 in forms available in the office.

2859 DIRECTOR

### விளம்பரம்

**கச்சாய் கிராமசபை**

கொடிகாமம் மடத்தடி வீதி வேலைக்கான கேள்விகள் கச்சாய் கிராமசபைத் தலைவரால் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ந் தேதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை ரூபா 50/- வைப்புப்பணமாகவும், ரூபா 10/- பத்திரப்பணமாகவும் கட்டியதன் பேரில் இக்காரியாலயத்தில் விநியோகிக்கப்படும்.

ஏனைய விபரங்கள் கச்சாய் கிராமசபை அலுவலகத்தில் வேலை நேரத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பம்) அ. த. சிதம்பரப்பிள்ளை
அக்கிராசனர்
கச்சாய் கிராமசபை
கொடிகாமம், 20-6-1971
2863

### கேள்வி விளம்பரம்

**வழுதலங்கொல்லைவாடி-மண்டலாய்க்கட்டு வீதி அமைத்தல்
இரண்டாம் பிரிவு
முள்ளிப்பற்றுக் கிராமசபை**

முள்ளிப்பற்றுக் கிராமசபைத் தலைவரால் 1971-ம் ஆண்டு யூன் மாதம் 28-ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மேற்படிவேலை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட வேலைக்கு கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10/-ம், கேள்விப் பணமாக ரூபா 50/-ம், கட்டுவதின் பேரில் 1971-ம் ஆண்டு யூன் மாதம் 27-ந் திகதி நண்பகல் 12 மணிவரையும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணமாகக் கட்டப்படும் பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. வேலைசம்பந்தமான மேலதிக விபரங்கள் யாவும் முள்ளிப்பற்றுக் கிராமசபை பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

க. கனகரத்தினம், ஜே. பி.
தலைவர்
முள்ளிப்பற்றுக்
கிராமசபை, இயக்கச்சி.
முள்ளிப்பற்றுக்
கிராமசபை பணிமனை,
இயக்கச்சி.
19-6-1971. 2864

---

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
நடித்த
**கண்ணன் என் காதலன்**

---

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி. ப 2 30, 5-30
எம். ஜி ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
**[illegible]**

---

## நாடு திரும்பினர்

அரியாலை, செவ்.

சுன்னாகம்கிறிஸ்தவசேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த போதகர் வண. செல்வரத்தினம் ('பெரியண்ணன்') ஹாங்ஹாங்கில் நடைபெற்ற கிறிஸ்தவ மகாநாட்டில் கலந்து கொண்டபின் இலங்கை திரும்பியுள்ளார்.

## கல்லூரி பரிசளிப்பு விழா

அரியாலை, செவ்வாய்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பரிசளிப்பு விழா இம்மாதம் 24ம் திகதி நடைபெறவிருக்கிறது. கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபாலா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## திருவிழா

சுழிபுரம், செவ்வாய்

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

## 'ஒழுக்க சீலராக திகழவேண்டும்'

அரியாலை, செவ்வாய்

'மாணவர்கள் ஒழுக்க சீலராய் திகழவேண்டும். எப்போதும் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திப்போமானால் நாம் சிறந்த வழியில் செல்ல முடியும்' என்று கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் மாணவ ஆசிரியராகக் கடமையாற்றிய திரு ஏ ஜெகநாதன் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு நடைபெற்ற பிரிவுபசார விழாவில் தலைமைவகித்துப் பேசிய மேற்படி கல்லூரி அதிபர் திரு இ. செல்வராசா கூறினார். மற்றும் பலரும் பேசினர்.

## இன்ஸ்பெக்டர்களாக பதவி உயர்வு

மாவிட்டபுரம், செவ்வாய்

வடக்கில் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்களாகக் கடமையாற்றிய இருவர் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் சப். இன்ஸ்பெக்டராக இருந்த எஸ். செல்லையாவும், கோப்பாய் பொலிஸ் நிலைய சப். இன்ஸ்பெக்டராக கடமையாற்றிய திரு. என் கிருஷ்ணசாமியுமே பதவி உயர்வு பெற்ற இருவருமாவர்

---

நாகமஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப 2-00, 5-45
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**குடும்பத்தலைவன்**

---

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
கல்யாணகுமார் - மாலினி
நடித்த
**அழகு நிலா**

---

றீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி. ப. 2-30
M. G. R, சாவித்திரி
P. S. வீரப்பா
நடித்த
**மகாதேவி**
(புதிய பிரதி)
Daily 6-00 p. m
Raquel Welch
in
FLARE UP
(Color)

---

## "நாயன்மார்கள் காட்டிய வழியில்..."

குருநகர், செவ்.

'கடவுள் எங்கே இருக்கிறார் என்று ஆராய்வதிலும் பார்க்க எங்களை நாங்களே நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும் நாயன்மார்கள் காட்டிய வழிமுறையில் எங்கள் வாழ்க்கையும் செல்ல வேண்டும்'

மயிலப்புலம் ஐயனார் கோவிலில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

இறைவனின் அருளால் மக்களாகப் பிறந்தோம் பெறுதற்கரிய இப்பிறவியைத் தந்த கடவுளை நாம் மறவாமல் வாழப்பழக வேண்டும். சாந்தத்தில் சாந்த சக்தி இருப்பதை நாம் அறியவேண்டுமாயின் அஃது கரைக்கூடிய ஒரு பொருளால் உணரமுடியும் அதுபோன்றே கடவுளும் காணமுடியாத இடத்திலில்லை. எங்களுடனே இருக்கின்றார். இதையுணர்ந்து கொள்ளும் திறமை எங்களுக்குவேண்டும்'

## டைரக்டர்களாக நியமனம்

மாவிட்டபுரம், செவ்வாய்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவு ஆரம்ப சங்கத்தின் டைரக்டர்களாக நால்வர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் பட்டினசபைத் தலைவரும் முன்னாள் செனட்டருமான திரு. பி. நாகலிங்கம் தலைமையிலான இந்த டைரக்டர்கள் குழுவில் திருவாளர்கள் பொ. நடனசிகாமணி, எஸ் நல்லதம்பி, க இராசரத்தினம் ஆகியோரே பிரஸ்தாப நால்வருமாவர்.

மண்டைதீவு

## கண்ணகை அம்மன் உற்சவம்

குருநகர், செவ்வாய்

மண்டைதீவு கண்ணகை அம்மன் வருடாந்தப் பொங்கல் விழா அடுத்த மாதம் 2ம் திகதி ஆரம்பமாகிறது. ஜூலை 2-ம் திகதி அம்மன் முத்தரிசித் தண்டலும், ஊர்வலமும் நடைபெறும். 5ம் திகதி தீமிதிப்பும், பொங்கல் விழாவும் இடம்பெறும்

## பத்திரிகை சுதந்திரம் பெறுமதியானது

நியுயோர்க். ஜூன் 22

'அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விரக்தியும் அதிருப்தியும் உற்ற வேளைகளில் அதை என்ன விதத்திலாவது எடுத்துரைப்பதற்கு பத்திரிகைக்குள்ள சுதந்திரத்திலும் பார்க்க அதிக பெறுமதிவாய்ந்தது எதுவுமில்லை. எங்கள் நாட்டை ஏனைய அரசமைப்புகளிலிருந்துவேறுபடுத்திக்காட்டுவது இச்சுதந்திரமே இலவயே சரித்திர காலந்தொட்டு அறிஞர்களும் பிரதமர்களும் எடுத்துக் கூறியுள்ளனர்'

இவ்வாறு 'நியுயோர்க் டைம்ஸ்' எனும் பத்திரிகை வியட்னாம் யுத்தம் பற்றிய இரகசிய அறிக்கைகளைப் பிரசுரித்தமைபற்றி தாக்கல் செய்த வழக்குவிசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. மேலும் பத்திரிகைச் சுதந்திரத்தில் பெறுமதிவாய்ந்த இவ்வம்சமான பிரசுரம் செய்வதை அரசு தடுத்தல் தகாது எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுக்கு மேலும் உதவிகள் இப்போது இல்லை

## உதவியளிக்கும் நாடுகள் முடிவு

### யாஹ்யாவின் நடவடிக்கைகளை காத்திருந்துபார்க்க யோசனை

பாரிஸ், ஜூன் 22

**பாகிஸ்தானுக்கு உதவியளிக்கும் நாடுகள் உதவிகள் பற்றி முடிவெடுப்பதை திகதி குறிப்பிடாமல் ஒத்திப்போட்டுள்ளன.**

**கிழக்கு வங்காளப் பிரச்னைக்கு ஜெனரல் யாஹ்யாகான் என்னவிதமான தீர்வு காண்கிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதென்று இந்த நாடுகள் முடிவெடுத்துள்ளன,**

*பாகிஸ்தானுக்கு எந்த ஒரு நாடாவது உதவியளிக்குமானால் அது கிழக்கு வங்காளத்தில் நடத்தப்படும் கட்டுழியங்களுக்கு ஆதரவளிப்பதாகவே கணிக்கப்பெறும் என்று இந்திய வெளிநாட்டமைச்சர் லண்டனில் கூறியிருக்கிறார். கிழக்குப்பாகிஸ்தான் பிரச்னைக்கு கட்டாயமாக அரசியல் தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற இந்திய நிலையை பிரிட்டனும் ஆதரிக்கின்றது.*

பாகிஸ்தானுக்கு உதவி கொடுக்கும் நாடுகளின் கூட்டம் பாரிசில் உலக வங்கித் தலைவரின் தலைமையில் நடைபெற்றது. மேற்கத்திய நாடுகள் பலவும் ஜப்பானும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றன. பாகிஸ்தானுக்கு மேற்கொண்டும் பொருளாதார உதவிகள் வழங்குவது பற்றி முடிவெடுப்பதை திகதி குறிப்பிடாமல் ஒத்திப்போடுவதற்கு இந்தநாடுகள் முடிவுசெய்தன. மேலும் பொருளாதார உதவிகள் வழங்குவதுபற்றி பாகிஸ்தான் அதிகாரிகளுடன் ஆலோசனைகள் நடத்துவதற்கு திகதி குறிப்பிடுவதென்று முன்பு இந்த நாடுகள் எண்ணியிருந்தன. இப்பொழுது கிழக்குப் பாகிஸ்தான் விஷயத்தில் என்ன மாதிரி அரசியல் தீர்வை ஜெனரல் யாஹ்யாகான் எடுக்கப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதென்றும் அதன்பின் பொருளாதார உதவிபற்றி முடிவெடுப்பதென்றும் இந்த நாடுகள் முடிவுசெய்துள்ளன.

பாகிஸ்தானுக்கு உதவிகள் அளிப்பது பற்றிய வாக்குறுதிகளைக் கொடுக்கும்படி அங்கத்துவ நாடுகளை உலக வங்கி கேட்டிருந்ததாகக் கூறப்படுவதை இந்த நாடுகளின் கூட்டம் முடிவுற்ற பின்னர் வெளியான ஓர் அறிக்கையில் மறுக்கப்பட்டது.

ஐ நாவின் மேற்பார்வையில் கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் மனிதாபிமான உதவிகளில் பங்கு ஏற்றுக்கொள்வதென இந்த நாடுகள் முடிவுசெய்துள்ளன. இந்த நாடுகள் கூட்டம் ஆரம்பமானதும் பாகிஸ்தானுக்கு உதவியளிப்பதன்மூலம் கிழக்குப் பாகிஸ்தான் கட்டுழியங்களுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று கோரி சுமார் 200 பேர் பாரிசில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்கள். இவர்களில் பலரும் பிரிட்டனிலிருந்து வந்தவர்கள் என்று கூறப்பட்டது.

## பிரி. தலைவர்களுடன் சுவர்ண்சிங் ஆலோசனை

பாகிஸ்தானுக்கு எந்த நாடாவது உதவியளிப்பதானால் அது கிழக்குப் பாகிஸ்தான் கட்டுழியங்களை மன்னிப்பதாகவே கருதப்படும் என்று இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. சுவர்ண்சிங் கூறினார். அங்கு அரசியல்தீர்வொன்று ஏற்படும்வரையில் பாகிஸ்தானுக்கு உதவியளிப்பதை மற்றநாடுகள் நிறுத்திவிட வேண்டும் என்று திரு. சுவர்ண் சிங் வற்புறுத்தினார்.

மாஸ்கோ, ஒட்டாவா, பொன், நியுயோர்க், பாரிஸ் ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்குள்ள தலைவர்களுக்கு கிழக்குப் பாகிஸ்தான் நிலைமை பற்றி திரு. சுவர்ண்சிங் விளக்கிக் கூறிவிட்டு இப்பொழுது லண்டன் திரும்பியுள்ளார். லண்டனிலிருந்து இன்று அவர் தாயகம் திரும்புகிறார். நேற்று அவர் பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூமைச் சந்தித்துப் பேசினார். பிரிட்டிஷ் பிரதமர் திரு ஹீத்தையும் அவர் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினார்.

பலநாடுகள் பாகிஸ்தானுக்கு உதவியளிப்பதைநிறுத்துவதுபற்றி ஆலோசித்து வருகின்றனவென்று திரு சுவர்ண்சிங் நிருபர்களிடம் தெரிவித்தார் ஆனால் அவை எவை என்று சொல்லவில்லை.

இந்தியாவுக்குள் வந்துள்ள அகதிகள் பெரும்பாலும் தற்காலிகமாகவே இருக்கிறார்கள். அவர்கள் பாகிஸ்தான் பிரஜைகள். அவர்கள் திரும்பிப்போய்த்தான் ஆகவேண்டும் என்றார் திரு. சுவர்ண் சிங்

**கூட்டறிக்கை**

திரு சுவர்ண்சிங்கும் பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் சேர் அலக்ஸாண்டர் ஹியூமும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் கூட்டறிக்கையொன்று விடுக்கப்பட்டது. இந்தியாவுக்குள் வந்து குவிந்துள்ள அகதிகள் மீண்டும் கிழக்குப்பாகிஸ்தானுக்கு திரும்பிச் செல்லக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். அங்கு திரும்பிச் செல்வதற்கான பத்திரமான நிலை ஏற்பட்டால்தான் அகதிகள் திரும்பிச் செல்ல முடியுமென்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

### இலங்கைப் பொம்மைகளுக்கு நல்ல பிரசாரம்

கொழும்பு, செவ்வாய்

தெரிவு செய்யப்பட்ட இலங்கைப் பொம்மைகள் சில டில்லி சர்வதேச பொம்மைகள் காட்சியில் வைக்கப்படவிருக்கின்றன. இக்கண்காட்சி இம்மாதம் நடைபெறும்.

## குன்றக்குடி அடிகள் ரஷ்யா போகிறார்

### அவரே வெளியிட்ட தகவல்

பட்டுக்கோட்டை, ஜூன்.22

குன்றக்குடி அடிகளார் வருகிற ஆகஸ்ட் மாதம் ரஷ்யா போகிறார். அங்கு பலவேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பேசுகிறார்.

பட்டுக்கோட்டையில் இது குறித்து குன்றக்குடி அடிகளார் நிருபர்களிடம் தெரிவித்தார்.

வருகிற ஆகஸ்டு மாதம் அல்லது செப்டம்பர் மாதத்தில் ரஷ்யா நாட்டிற்குச் செல்ல இருக்கிறேன். அங்கு ஏறக்குறைய ஒரு மாத காலம் தங்கி பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்ற இருக்கிறேன்.

நான் இனி குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுக்குத்தான் செல்வது என்று முடிவு செய்து இருக்கிறேன். மக்கள் இலக்கியப்பேரவை என்ற அமைப்பின் நிறுவி இலக்கியம், அரசியல், சமூக சமய கட்டங்களுக்கு மட்டும் செல்ல திட்டமிட்டிருக்கிறேன்

குறிப்பாக திருக்குறள், சங்க இலக்கியங்கள் சம்பந்தப்பட்ட கூட்டங்களிலும் அரசியல் சமூக சோசலிச சித்தாந்தத்தை வலியுறுத்துகின்ற மேடைகள் அதற்காகப் பணியாற்றும் அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வேன்.

மேலும் சமய அமைப்புகளில் அறநெறித் திருக்கூட்டங்களுக்குத்தான் செல்வது என்று முடிவு செய்திருக்கிறேன்

மக்கள் இலக்கிய பேரவையில் 50 அறிஞர்கள். பேராசிரியர்கள் இருப்பார்கள். இவர்களை இந்த திட்டமிட்டமுறையிலேயே கருத்தை அடிப்படையாக வைத்துச் செயற்பட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த அடிப்படையிலே இயங்குகிற அமைப்புகளுக்கும் கூட்டங்களுக்கும் குறைந்த செலவில் மக்கள் இலக்கியப் பேரவை சார்பில் அறிஞர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள்,

கூட்டங்களுக்கு போக வர என்ன செலவு ஆகிறதோ அதை மட்டும்தான் வாங்கிக் கொள்வார்கள்.

மக்கள் இலக்கிய பேரவையின் முக்கிய நோக்கம் கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் அநாவசிய மாகும் செலவை குறைப்பது. இலக்கியம் சமூகத்தில் சோசலிச சமயசித்தாந்தங்களை பரப்புவது ஆகும்.

இன்று கூட்டங்கள் நிகழச்சிகளுக்கு போவதை சொற்பொழிவாளர்கள் வியாபார நோக்கமாகக் கொண்டுவிட்டார்கள். இந்த நிலையை மாற்றி குறைந்த செலவில் கூட்டங்களை நடத்தி - மக்கள் இலக்கிய பேரவை பாடுபடும்.

......

### 19பேர் கைது

கோட்டை, செவ்

நேற்று முன்தினம் நாடு பூராவும் எந்தவொரு பகுதியிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை என்றும், ஆயினும் 19 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்றும் அரசாங்க தகவல் பகுதி அறிவித்தது.

பயங்கரவாதிகளை தேடிப் பிடிக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.


லான்ட்மாஸ்டர்

இரு - சில்லு ட்ராக்டர்

திரும்பவும் விற்பனையாகிறது.

குறிப்பிட்டளவு

மட்டுமே இருப்பதால்

முந்துங்கள் !

அண்மையிலுள்ள பங்கீட்டாளருடன் தொடர்பு கொள்க அல்லது எழுதுக:

பிரவுண்ஸ்
குறூப்
இன்டஸ்றீஸ்

டெம்பிளர் வீதிக்கு அப்பால், கல்கிஸை.

டெலி: 71 – 478.


## உலக நீதிமன்றத் தீர்ப்பையும் தெ. ஆபிரிக்கா நிராகரித்தது!

கேப்டவுன், ஜூன் 22

தென்மேற்கா ஆபிரிக்காவிலிருந்து தென்னாபிரிக்கா வெளியேற வேண்டுமென்று சர்வதேச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை தென்னாபிரிக்க பிரதம மந்திரி திரு வொஸ்டர் நிராகரித்துவிட்டார்.

தென்மேற்கு ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கா ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இங்குள்ள கறுப்பர் நாடுகளுக்கு சுதந்திரம் வழங்கிவிட்டு வெளியேறும்படி ஹேக்கில் உள்ள சர்வதேச நீதிமன்றம் தென்னாபிரிக்க அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை இப்பொழுது தென்னாபிரிக்கா நிராகரித்துவிட்டது. சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியல் நோக்கம் கொண்டதுஎன்று தென்னாபிரிக்க பிரதம மந்திரி திரு. வொஸ்டர் தெரிவித்துள்ளார். தென்மேற்கு ஆபிரிக்காவில் நிறத்துவேஷத்தைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்க அரசாங்கம் கறுப்பர்நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்திவருவதை ஐ.நா. வும் ஏற்கனவே கண்டித்திருக்கின்றது. இப் பிரதேசத்திலிருந்து வெளியேறும்படி ஐ.நா. விடுத்த அறிவித்தலை ஏற்கனவே தென்னாபிரிக்கா நிராகரித்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, தீவுப்பகுதிக்கு

## அதிகசக்தி வாய்ந்த வானொலி தந்திவசதி!

### தபாலமைச்சர் வெளியிட்ட தகவல்

— நமது நிருபர் பெ. தில்லைநாதன் —

பூநகரி, செவ்வாய் வெளியிட்டார்.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பல உபதபால் நிலயங்களுக்கு மிக விரைவில் ரேடியோ, தந்தி, வசதி கிடைக்கவிருக்கிறது. இரணைதீவு பல்லவராயன் கட்டு கிராஞ்சி கவுதாரிமுனை, இளாவி வன்னேரிக்குளம் ஆகிய உபதபால்நிலயங்களுக்கு இவ் வசதி கிடைக்கும்.

தந்திப் போக்குவரத்து வசதியில்லாததினால் இப்பகுதி மக்கள் அனுபவித்து வரும் கஷ்டங்கள் பற்றி கிளிநொச்சி எம்.பி. திரு வி ஆனந்தசங்கரி தபால் தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியருடன் பேசியபோது அமைச்சர் இத் தகவலை வெளியிட்டார்.

ரேடியோ தந்தி வசதி கிடைப்பதன்மூலம் இப்பகுதியில் போக்குவரத்தே இல்லாத குடியேற்றத் திட்டங்களில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் அனுபவித்து வந்த கஷ்டம் தீருமென எதிர்பார்க்கப்படுகிறது, பதினைந்து இருபது மைல்கள்வரை கால்நடையாகச் சென்று அவசரதந்திகளை இப்பகுதி மக்கள் இதுவரை கொடுத்து வந்தனர்.

இந்த நிதிஆண்டு முடியுமுன் இந்த வசதிகள் செய்துதரப்படும் என்று அமைச்சர் உறுதியளித்ததாக திரு ஆனந்தசங்கரி தெரிவித்தார் இதற்கான பரிசீலனைத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக தபால் தந்திப் பகுதியினர் அண்மையில் இரணைதீவுக்குச் சென்றிருந்தனர்.

#### தீவுப்பகுதியில்

தீவுப்பகுதியில் அனலைதீவு நயினாதீவு, நெடுந் தீவு போன்ற இடங்களில் தற்போதிருந்துவரும் ரேடியோ தந்திச்சேவையை அகற்றிவிட்டு அதிசக்திவாய்ந்த கருவிகளைக்கொண்டு இயங்கும் ரேடியோ தந்தி இயந்திரங்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன தற்போது தந்திவசதியில்லாத எழுவைதீவிலும் ரேடியோ தந்தி வசதி செய்து கொடுக்கப்படும் என்று தபால்தந்தி அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## இன்றைய பலன்

ஆனி மாதம் 9-ந் திகதி

(23- 6- 71)

மேஷம்: இன்று எதிலும் நிச்சயமற்றநிலைதென்படும். மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும். மன அடக்கம் நன்று.

ரிஷபம்: ஆத்திரப்படுவதால் நண்பர்களைப் பகைத்துக்கொள்ளுவீர்கள் எழுத்து மூலம் தொடர்பு கொள்வதை இன்று தவிர்த்துக் கொள்ளவும்.

மிதுனம்: தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும். வாழ்க்கையின் தரமும் உயரும். காதலர்கள் வாழ்வில் கற்கண்டான தினம்.

கடகம்: எருத்த வேற்றுமைகள் களைந்து இடமளிக்கும். புதிய இடத்திலிருந்து பகை தலைதூக்கலாம். மௌனமும் தெய்வபக்தியும் நன்று

சிம்மம்: சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதட்டநிலை தென்படும். அவசரமுடிவின்மூலம் குறை கேட்க நேரிடும்.

கன்னி: புத்திர வழியால் புகழும் உண்டு, புதியபாதையில் நடைபோடுவீர்கள், நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பு கிடைக்கும்.

துலாம்: எக்காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவி செய்யப்போய் குறைகேட்க நேரிடலாம்

விருச்சிகம்: வாழ்க்கையில் தென்றல்வீசும். காதல் சிட்டுக்களுக்கு கனிவான தினம். கணவன் மனைவி உறவு அன்பு கொண்டதாக இருக்கும்.

தனுசு: இன்னலின் பின்னரல் இலாபம் அதிகரிக்கும். முதியவர் ஒருவரின் உடல்நலம் கவலையைத் தரலாம்

மகரம்: பொதுத் துறையில் நாட்டம் ஏற்படும். சிலர் தேர்தல் ஜுரத்தாலும் பிடிக்கப்படலாம். பிதா வழியின்மூலம் ஆதரவுக்கு இடமுண்டு

கும்பம்: ஒய்வையும் உல்லாசத்தையும் விரும்புவீர்கள் தொழில் துறையில் வரைவில் நல்ல மாற்றம் ஏற்படலாம். இன்று பொன்னான தினம்,

மீனம்: அதிஷ்ட இலாபங்களுக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. புதுத் தொழிலில் முதலீடு செய்வதற்கு ஏற்ற தினம். செல்வாக்கு வளரும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டி மேற்கு மத்தொனி முனிகோடை கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெறும் தீர்த்தோற்சவம் ஆனிஉத்தரத்தினமான வரும் புதன்கிழமை நடைபெறும்.

0 0

வல்வெட்டித்துறை, செவ்

பொலிகண்டி கந்தவனக் கடவை ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 23-ந் திகதிகொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து இருவாரங்கள் நடைபெறும். இரவு உற்சவம் தினமும் இரவு 9 மணியுடன் முடிவடையும்.

## கடை நேரத்தில் மாற்றம்?

கோட்டை, செவ்வாய்

கடைகள் திறக்கும்நேரம் மாற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் காலை 9-30 மணி முதல் மாலை 5-30 வரை கடைகள் திறந்திருக்கவும். வெளியூர்களில் உள்ள கடைகளை காலை 10 மணி முதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கவும் அனுமதி வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான அரசாங்க அறிவிப்பு சில தினங்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

……

### விளையாட்டுப்போட்டி

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் 28ந் திகதி நடைபெறவிருக்கிறது.

## மாலை வகுப்பு மாணவர் அவதி

மாவிட்டபுரம், செவ்.

கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரியில் மாலைவகுப்புகளுக்குச்செல்லும் மாணவர்கள் போக்குவரத்துக் கஷ்டத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனராம்.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி சென்ற 16ம் திகதி முதல் மாலை 2-30க்கு ஆரம்பமாகி இரவு6 30மணி வரை நடைபெறுகிற இவ் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் வகுப்புமுடிந்து வீட்டுக்குச் செல்லமுடியாது கஷ்டப்படுகின்றனர். முன்பு இவர்களுடைய வகுப்புகள் முடிந்ததும் யாழ்ப்பாணத்திலிருந்து ரயில் சேவைகள் நடைபெற்றதால் இலகுவில் உடனடியாகவே வீடு திரும்பக் கூடியதாகவிருந்தது. ஆனால் தற்போது ரயில் சேவைகள் நடைபெறுவதால் மாணவர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பஸ் சேவையும் முன்னர்போல் நடைபெறுவதால் மாணவர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

……

## ஒத்திவைப்பு

வல்வெட்டித்துறை, செவ்

பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சியைச் சேர்ந்த க. இராசதுரை க. கிட்டினன் பொ தேவராசா ஆகியோர் கடந்த பங்குனிமாதம் 24-ந் திகதி முருகன் கிருஷ்ண பிள்ளை என்பவரைத் தாக்கி படுகாயம் விளைவித்ததாகப் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யாழ்.-சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் திரு கே. பாலசிங்கம் சாட்சியமளித்த பின் மாஜிஸ்திரேட் அடுத்த மாதம் 5-ந் திகதிக்கு வழக்கைஒத்திவைத்தார்.

……

## விசேஷ பிரதிநிதியாக கலந்து கொள்வார்

அரியாலை, செவ்வாய்

இம்மாதம் 24-ம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் யெகோவாவின் சாட்சிகள் மகாநாட்டில் வடமாகாணப் பிரதிநிதியாக திரு. ஆர் ஏ. இராஜையா விசேஷமாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நான்கு நாட்கள் நடைபெறும் இம் மகாநாட்டில் கனடாப்பிரதிநிதி திரு. குளுயன் அவுஸ்திரேலியபிரதிநிதி திரு. எம். டி. கம்பல் இலங்கைப் பிரதிநிதி டி. ஆர் மத்தியூஸ் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

……

## தலைவராக தெரிவு

சுழிபுரம், செவ்.

சங்கானை பல நோக்க கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவராக திரு. வ. இராசகந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் வலிகாமம் மேற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவராக சென்ற ஆண்டு பணியாற்றினார்.

—…

## சிரமதானம்

அனலைதீவு, செவ்வாய்

அனலைதீவு வடலூர் அரசினர் பாடசாலையின் மூன்று பக்க வேலிகளை இப்பகுதி மக்கள் சிரமதானம் மூலம் அடைத்து முடித்தனர். இதனால் சுமார் 200 ரூபா மீதப்படுத்தப்பட்டுள்ளது.

## ஜாக்குலின் ஒனாசிஸுக்கு புற்று நோய்?

பாரிஸ், ஜூன் 22

உலக கோடீஸ்வரர் ஒனாசிஸ் மனைவியான ஜாக்குலின் புற்றுநோயால் அவதியுறுவதாக வெளிநாட்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஜாக்குலின்- ஒனாசிஸ் பற்றிய செய்திகளை வெளியிடுவதில் வெளிநாட்டு பத்திரிகைகளுக்குள் பலத்த போட்டி நிலவிவருகிறது. அவர்களை விதவிதமான கோணங்களில் படம்பிடித்து செய்திகளை பிரசுரித்து வருகின்றனர்.

அதேபோன்று இப்போது படங்களைப் பிரசுரித்து ஜாக்குலினுக்குப் புற்றுநோய் ஏற்பட்டிருக்கிறது என்ற செய்தியையும் அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் பிரபலவார இதழான "ஐபாரிஸ்" என்ற பத்திரிகை 'ஜாக்குலின் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு பாரிஸ் நகர ஆஸ்பத்திரி ஒன்றில் இரகசியமாக அனுமதிக்கப்பட்டிருந்தார்' என்கிற ஒரு செய்தியைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

கிரேக்க நாட்டின் பிரபல வார பத்திரிகைகளான விமா. அக்ரோபாலின் போத் மற்றும் இத்தாலி, இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளிலுள்ள பத்திரிகைகளும் ஜாக்குலினுக்கு புற்றுநோய் என்ற செய்தியை வெளியிட்டுள்ளன.

மேற்கு ஜெர்மனியில் பெரிய பத்திரிகையான "திருபேலட்" என்ற பத்திரிகை ஜாக்குலினுக்கு ஏற்பட்டுள்ள புற்றுநோயை பாரிஸ் நகரில் புகழ்பெற்ற புற்றுநோய் நிபுணர் பரிசோதித்துவருகிறார் என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

காலஞ்சென்ற அமெரிக்க அதிபர் ஜோன் எப் கென்னடியின் முன்னாள் மனைவி இவர் என்பது தெரிந்ததே.

## பிரயாணிகள் அனுபவிக்கும் கஷ்டம்

அனலைதீவு செவ்.

தீவுப்பகுதியில் ஊர்காவற்றுறை, எழுவைதீவு, நயினாதீவு போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் படகுகள்குறிப்பிட்ட நேரசூசிகையின்படி சேவையில் ஈடுபடுத்தப்படாததினால் இப்பகுதி மக்கள் அடிக்கடி கஷ்டமுறவேண்டியிருக்கிறதாம்.

தீவுப்பகுதி காரியாதிகாரியினால் வழங்கப்பட்ட நேரசூசியை சில படகுச் சொந்தக்காரர் மீறி நடப்பதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட நேரத்துக்கு முந்தியும், பிந்தியும் தாங்கள் விரும்பியபடி படகுசேவை நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

……

### கரபந்தாட்டம்

தாவடி, செவ்.

கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய கோஷ்டியினருக்கும் கொக்குவில் ரேட் மாஸ்டரர் விளையாட்டுக்கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டத்தில், வேதபாராயண சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. கொக்குவில் ரேட் மாஸ்டர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

……

## இடமாற்றம்

யாழ்ப்பாணம் புதன்

மல்லூர் அடம்பன் மகாவித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. க. ஆறுமுகமும், மீசாலை வடக்கு வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் பணிபுரிந்த திரு. கு. சங்கரப்பிள்ளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து திருமதி எஸ் வ நாயமூர்த்தி மீசாலை மேற்கு விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கு மாற்றலாகியுள்ளார். (கு. வி. ம)

## பாடசாலை இயங்கவில்லை?

பூநகரி, செவ்வாய்

பூநகரியைச் சேர்ந்த கவுதாரிமுனை என்னும் கிராமத்திலுள்ள ஒரே ஒரு பாடசாலை கடந்த சில மாதங்களாக இயங்காமல் உள்ளது. இப்பாடசாலைக் ஆசிரியர்களும் பாடசாலைக்கும் கிரமமாக சமூகமளிப்பதில்லை என்றும் தெரிகிறது இது சம்பந்தமாக இப்பகுதிபெற்றோர் கல்வி இலாகாவுடன் தொடர்பு கொண்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லையாம்.

இத்தவணை ஆரம்பமாகிய பின்பும் பாடசாலை இயங்கவில்லையாம்.

—

## மணிவாசகர் விழா

வல்வெட்டித்துறை செவ்

ஆலவாய் முத்துமாரி அம்மன் கோவில் மாணிக்கவாசகர் குருபூசை இம்மாதம் 27-ந் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. அன்று பகல் அன்னதானமும் இரவு 'திருவாசகம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவும் இசைக்கச்சேரிகளும் இடம்பெறும்.

—

## திருப்பணிக்கு நிதி உதவி

காரைநகர், செவ்வாய்

காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி கும்பாபிஷேகம் செய்தற்கு நிதியுதவி வழங்கியுதவுமாறு திருப்பணிச்சபை வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. திருப்பணிக்கு சுமார் 10 ஆயிரம் ரூபா செலவாகும் எனமதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆலய பாலஸ்தாபனம் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவுள்ளது.

## மோசடி வழக்கு

வல்வெட்டித்துறை, செவ்

கரவெட்டியைச் சேர்ந்த செ இலயோகமணி என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த செ நாகம்மாவுக்கு சொந்தமான ரூபா 800 பெறுமதியான தங்கச்சங்கிலியை மோசடி செய்ததாக பருத்தித்துறைப் பொலிசார் வழக்கொன்றை பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் தாக்கல் செய்துள்ளனர்.

## சுழிபுரம் மீனவர் மகஜர்

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் மீனவர்களுக்கு திருவடிநிலை தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகாமையிலுள்ள முடிக்குரிய காணியில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் ஓர் திட்டத்தை அமுல்நடாத்துமாறு சுழிபுரம் மீனவர்கள் மகஜர் மூலம் மீன்பிடி அமைச்சரை வேண்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயாறன் எழுதுவது..

ஐயாறனைக் காணோமே. என்ன ஆயிற்று? என்று கேட்டு ஓர் அன்பர் எழுதுகின்றார். தொண்ணூறு வயதான அன்னையார் ஊரில் காலமானார் அவசரத் தந்திகள் அடித்திருந்தார்கள். ஆனால், அவசரகாலம். தந்தி, விமானசேவைகூட இரண்டொரு நாட்கள் நின்றிருந்தது. உடன் தந்தி கிடைக்கவில்லை. இரண்டு நாள் தாமதித்துத் தான் செல்லமுடிந்தது ஏமாற்றம் தான் என்ன செய்யலாம்?

அன்னையைப்பற்றிஎண்ணுகையில் அடுக்கடுக்காகப் பல பல சம்பவங்கள் நினைப்புவருகின்றன. இரண்டொன்றை மட்டும் இங்கு எடுத்துச்சொல்ல மனம் தூண்டுகிறது. பன்னிக்க வேண்டும். சென்னையிலே ஆங்கில 'சுயராஜ்யா'' பத்திரிகையில் தொண்டாற்றுகையிலே, சுமார் 12 தினசரிப் பத்திரிகைகள் இலவசமாக மாற்று முறையில் வீட்டுக்குவரும். இந்த முறை துரதிருஷ்டமாக இலங்கையில் இல்லை. அப்போது வாலிப வயது. மனதுக்குள் பெருமை, யாரிடம் சொல்லிக் கொள்ளுவது? அம்மாவிடம், "இவ்வளவு பத்திரிகைகள் வருகிறதே பார்த்தீர்களா?'' என்று ஒருவித கர்வத்துடன் கேட்டேன். ஒரு பெரிய போடு போட்டு என் கர்வத்தை அடக்கிவிட்டார் அன்னையார்! எப்படித் தெரியுமா? குப்பைக்காரனிடத்திலே குப்பைக்கு என்ன குறைச்சல்? என்று உடன் சொன்னதும், எனக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை. பெருமைப்படாமல் அடக்கமாக இருக்க எனக்கு அன்னையார் நல்ல பாடம் கற்பித்தார்.

மற்றொரு சம்பவம். ஐந்தாறு வருடங்களுக்கு முன்பாக கோயிலில் திருவிழாவுக்காகக் கொடிஏறியது. அன்னையாரும் தள்ளாடித் தள்ளாடி வந்திருந்தார் தூரத்தில் இருந்து என்னைப் பார்த்துவிட்டு, இங்கே வரும்படி அழைத்தார் சென்றேன். "கோவிலுக்கு வந்தால் அங்கு இங்கு பார்க்கக்கூடாது. ஐந்தெழுத்து மந்திரத்தை மனதுக்குள்ளே சொல்லிக் கொண்டும், கூடுமானவரை சுவாமியைப் பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டும். யாருடனும் வீண் வார்த்தை பேசக்கூடாது'' என்றார் அச்சமயம் என் கண்கள் அங்குமிங்கும் பார்த்ததை அவர் கண்டுவிட்டார்போலும், அவர் அன்று கூறியது பெரிய உபதேசமாயிற்று. இந்த மாதிரி என்தவறுகளை அன்புடன் திருத்தி நல்வழிகாட்ட இனி எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? இன்னும் இப்படி எவ்வளவோ!

0 0 0

திரும்பி வந்தேன். அவசரகாலப் பிரகடனப்படி பத்திரிகைத் தணிக்கை பேனாவைப் பேப்பரில் வைக்கவே கைகூசுகிறது. என்ன எழுதலாம்? எது கூடாது? என்பது தெரியவில்லை முதலில் அதிகாரியிடம் காட்டி அனுமதி பெற்ற பின்பே தலையங்கம் முதலியவற்றைப் பிரசுரிக்கலாமென்று அறிந்தேன். உற்சாகமும், சுதந்திரமும் இருந்தால்தானே எழுத்து ஓடும். பல நிர்ப்பந்தங்களுக்கிடையிலே எழுதத் தோன்றவில்லை. இதற்காக எழுதாமலும் இருக்கமுடியவில்லை. அன்றாட அனுபவங்களைப் பற்றியே எழுதலாம் என்று இறைவனைப் பிரார்த்திக்கொண்டு மீண்டும் பேனாவை எடுக்கிறேன்.

0 0 0

கொழும்பிலுள்ள கதிர்காமத் தொண்டர் சபையைச் சேர்ந்த இரு அன்பர்கள் நேற்று வந்தனர். கையிலே 'கந்தர் அநுபூதி' என்ற அழகான நூல் இருந்தது. கருணை பாண்டியனார் அவர்கள் பாடம் சொன்ன கருத்துரைகளுடன் அத்தொண்டர்சபையினர் இந்த ''மந்திர மாலையை'' அழகாக அச்சிட்டு இலவசமாக வெளியிட்டுள்ளனர். ஒரு புத்தகத்தின் அடக்க விலை இரண்டு ரூபாய்களாம். அதை இலவசமாக விநியோகிக்க இச்சபையார் முன்வந்தது நல்ல புண்ணியம். ஞான தானமுமாகும் இதற்கு உதவியவர்களைப் பாராட்டவேண்டும். சங்கடப்படும் மனதுக்கு ஆறுதலும், நம்பிக்கையும் அளித்து அமைதிக்கும் இன்பத்துக்கும் வழிகாட்டுவது பெரிய தர்மமல்லவா?

கதிர்காமத் தொண்டர் சபையினர் கூடி, இம்முறையும் கொழும்பிலும், மாத்தறையிலும் கதிர்காம யாத்திரிகர்களுக்கு வழக்கம் போல் அன்னதானங்கள் செய்வதுடன், அவர்கள் ஊரடங்குச்சட்ட அமுலில்லுள்ள இரவுக் காலத்தில் படுக்க வசதியும் அளிப்பதென்றும் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

நாட்டில் அவசரகாலம் இன்னும்நீடிப்பதாலும். சிற்சில சம்பவங்கள் நடப்பதாக அறிவிக்கப்படுவதாலும், இம்முறை முன்போல் கதிர்காமத்துக்கு அதிகமான மக்கள் யாத்திரை செல்வார்களா என்பது தெரியவில்லை.

கதிர்காமத்தில் வருகிற ஜூலை மாதம் 28ந் திகதி கொடி ஏறுகிறது. அன்று முதல் தீர்த்தம்வரை அன்னதானப் பணி செய்ய வழக்கம்போல் இத்தொண்டர் சபையினர் இந்த அவசர காலத்திலும் தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

0 0 0

கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் பல வருடகாலமாகத் தொண்டாற்றிவரும் சுவாமி ஸ்ரீரெங்கானந்தா அவர்கள் சமீபத்தில் இந்தியாவுக்குத் திரும்புவார் என்று தெரிகிறது. அவர் யாழ்ப்பாணம் உள்ளிட்டு இலங்கையின் பல பகுதிகளிலும் சென்று சமயப் பிரசங்கங்கள் செய்துள்ளதுடன், நாடகங்களை நடத்தியும், பஜனைகள் செய்தும் கலைகள் மூலம் தெய்வ பக்தியைப் பரப்பித் தொண்டு ஆற்றியுள்ளார். அவருக்கு கொழும்பு ஸ்ரீராமகான சபையினர் பிரியாவிடை உபசாரமளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## செவிடருக்கென புதுவித தொலைபேசி

லண்டன், ஜூன் 22

பொதுமக்கள் பாவிக்கும் தொலைபேசி இணைப்புக்களைச் செவிடரும் பாவிக்கக் கூடியவகையில் இப்பொழுது பிரிட்டனில் புரட்சிகரமான சாதனமொன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இச்சாதனம் செவிடரின் கையால் எழுதப்பட்ட தகவல்களைப்பெற்று அவற்றை மின் சைகைகளாக மாற்றி, தொலைபேசியில் மறுபக்கத்தில் இருப்போருக்கு அறிவித்து விடுகிறது அதேபோன்று அந்தப்பர் தரும் தகவலையும் மீண்டும் மின் சைகைகளாக மாற்றிச் செவிடருக்குக் கொடுத்து விடுகிறது தொலைபேசியின் முகப்பில் இருக்கும் ஒரு விசேஷ திரையில் இம்மின் சைகைகள் வர்ண ஒளிகளாக 'மின்னி' 'மின்னி' இத்தகவல்களைக்கொடுக்கிறன.

செவிடர்கள் செய்யவேண்டியதெல்லாம் தொலைபேசியுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு திரையில், விசேஷ பேனாவொன்டு தாம் அனுப்ப வேண்டிய செய்தியை எழுதிவிடவேண்டியதுதான்! பேனாவால் எழுதப்படும் ஒவ்வொரு குறியும் மின் அதிர்ச்சிகளாக மாற்றப்பட்டு அனுப்பப்படுகின்றன மறுபக்கத்தில் இருந்து கிடைக்கும் செய்திகளும் இதே போன்று மின் அதிர்ச்சிகளாக முதலில் வந்து பின் எழுத்துக்களாகத் திரையில் மாறுகின்றன.

பிரிட்டனில் பல பாகங்களில் இப்புதிய சாதனம் பாவிக்கப்பட்டு அமோக பலனைத்தந்துள்ளது. இச்சாதனம், செவிடரின் எப்படிப்பட்ட கிறுக்கல் கையெழுத்தையும் கிரகிக்கும் வல்லமையுடையதால் எவ்வித பயமின்றி இலகுவாக இப்புதுமையான தொலைபேசி இணைப்புகளைப்பாவிக்கலாம்.

—

கோட்டை, செவ்வாய்

வெகுவிரைவில் அரசாங்க காரியக் கட்டுத்தாபனம் நிறுவப்படவிருக்கிறது. இதை நிறுவுவதற்கு 25 லட்சம் ரூபா செலவாகும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## பூவில் நிலைத்தான்

பிறப்பார் பலபேர் நீள்புவியில்
பின்னர் ஒருநாள் உலகத்தை
மறப்பார்; பிரம தேவன்கை
வரைந்த விதிக்கே உட்பட்டே
இறப்பர் இதனை மாற்றிடுவார்
இல்லை! ஆனால் மாகவியோ
இறப்பானோமோ? விதிவகுத்தோன்
ஏமாற்றந்தான் அடைபத்தன்
பாவில் படர்ந்தான்; பண்பாளர்
படிப்பில் வாழ்வான்; ஈழமெனும்
தீவில் தமிழில் புதுமைகளை
சேர்த்த உருத்ர மூர்த்தியவன்
நாவின் சுவையை உண்டவர்கள்
நாளும் மறக்கா வாறிந்தப்
பூவில் நிலைத்தான்! பூதவுடல்
போனால் என்ன போகட்டும்!

—கவிஞர் இ. நாகராஜன்

★

## வசனம் விரிந்தது

உருத்திர மூர்த்தி யென்றே
உயரிய நாமம் பூண்டோய்!
பெருந்தசீர்க் கவிகள் யாத்தே
பிறங்கிடமா கவியாய் நின்றோய்
சிரித்திடு வதனம் பூத்து
செயற்றிறன் காட்டிச் செம்மை
விரித்தநீ எங்கே சென்றாய்?
விசனமே விரிந்த தந்தோ!

—கவிஞர் [illegible]

## திருட்டில் துப்புத்துலக்க இளம் பெண்ணின் படம்!

மாவிட்டபுரம், செவ்வாய்

பட்டப்பகலில் துணிகரத் திருட்டில் ஈடுபட்ட கோஷ்டி இளம் பெண் ஒருவரின் புகைப்படத்தை விட்டுச்சென்றுவிட்டதாம், இந்தப் பெண்ணைக் கண்டுபிடித்துத் திருட்டின் மர்மத்தைத் துலக்க பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

மாவிட்டபுரத்தைச்சேர்ந்த எஸ் வல்லிபுரம் என்னும் தெல்லிப்பழை தபால் நிலைய ஊழியரும் அவர் மனைவியும் மகனும் கடந்த 18 ம் திகதி காலை வேலைக்குச் சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்பிய சமயம் வீட்டுக்கதவு உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த விலை உயர்ந்த உடுப்புகள், தோடு' ரொக்கப்பணம் உட்படப் பல பொருட்கள் காணமல்போயிருந்ததைபடுத்து காங்கேசன்துறை பொலிசில் புகார் செய்யப்பட்டது இச்சம்பவம் நடைபெற்ற வீட்டில் ஒரு இளம்பெண்ணின் படமும் சவரைக்குறி பொறித்த ஷேர்ட் ஒன்றும் கத்தி ஒன்றும் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது திருடர்களால் விட்டுச்செல்லப்பட்டதாகக் கருதப்படும் பெண்ணின் படத்தின்பின் ஸ்ரூடியோவின் பெயர் இருந்ததால் பொலிசார் அந்த ஸ்ரூடியோவில் பிரஸ்தாப பெண்ணின் பெயரையும் விலாசத்தையும் பெற்றுத் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து காங்கேசன்துறை பொலிஸ் பகுதிக் குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. எஸ் செல்லையா தலைமையில் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## "கடற்றொழில் ஆலோசனைச்சபையில் இவர்களை நியமிக்கவும்''

மாவிட்டபுரம். செவ்வாய்

"கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளையே கடற்றொழில் ஆலோசனைச் சபையில் நியமிக்க வேண்டும்" என்று கடற்றொழில் அமைச்சரைக்கோரியுள்ளது ஊறணி புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம்.

கடற்றொழிலாளர்கள் குறைகள்பற்றியும் அபிவிருத்திபற்றியும் ஆராய கடற்றொழில் அமைச்சரால் நியமிக்கப்பட்ட கடற்றொழில் ஆலோசனைக்குழுவில் கடற்றொழில் சங்கத்தில் அங்கம் வகிக்காதவர்களை நியமித்திருப்பது சரியல்ல. இவர்களுக்குக் கடற்றொழிலாளர் பிரச்னைகள்பற்றித் தெரிய முடியாது. எனவே தற்போது நியமனம் வழங்கப்பட்டவர்களில் கடற்றொழில் சங்கங்களில் இல்லாதவர்களை நீக்கி வேறு ஆட்களை நியமிக்கவேண்டும் என்று சங்கம் விசேஷகூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியது கடற்றொழில் அதிபருக்கும் யாழ் அரசாங்க அதிபருக்கும் இத்தீர்மானத்தை அனுப்புவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

யாழ் பெரும்பாக கடற்றொழில் காரியாலயம் நகரின் புறம்பான இடத்திலும் பஸ் போக்குவரத்து இல்லாத இடத்திலும் அமைந்துள்ளதால் கடற்றொழிலாளர் வசதியை முன்னிட்டு இதனை யாழ் அரசாங்க செயலகத்தில் இடம்பெறச் செய்யவேண்டும் என்று யாழ் அரசாங்க அதிபரைக் கோரும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

—

## இறைச்சி நிறுக்க புதிய தராசுகள்

கோட்டை செவ்வாய்

இருபக்கமும் நிறுபவர்கள் தாம் வாங்கும்இறைச்சியின் எடையை சரியானதாஎனப் பார்த்தறியக்கூடியதானவிதத்தில் புதிய தராசுகள் அமுலுக்குவரவுள்ளன.

இறைச்சிக் கடைக்காரர்கள் இப்புதிய தராசுகளையே பாவிக்கும்படி கேட்கப்படவுள்ளது. இப்புதியதிட்டம் கொழும்பு நகரில் முதலில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். கொழும்பு முனிசிப்பல் சபை இப்புதிய தராசுகளை வாங்கி விநியோகிக்க உள்ளது.

......

## 'பஸ் சேவையை சீரமைக்கவும்'

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம் - யாழ்ப்பாணம் பஸ் சேவை சீர்கேடாக இருப்பதினால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என்றும் பஸ் பிரயாணிகளின் இக் கஷ்டத்தை நீக்கும் வகையில் பஸ் சேவையைச் சீரமைக்குமாறும் கோரும் மகஜரொன்றை சுழிபுரம் பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச முகாமையாளருக்கு அனுப்பிவைத்துள்ளது.

......

## கல்வி அமைச்சர் கோரும் தீர்மானம்

ஊரதீவு, செவ்வாய்

இலங்கையில் மேலும் பல பயிற்சிக்கலாசாலைகளை உருவாக்கி சிறந்த ஆசிரியர்களைத் தோற்றுவிக்கவேண்டிய இந்நேரத்தில் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை மூடப்பட்டிருக்கிறது. என்ற செய்தி எமக்கு பெரும் ஆச்சரியத்தை உண்டாக்குகின்றது. எனவே இக்கலாசாலையை மூடாது தொடர்ந்து இதன்சேவை மக்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யவும்.

இவ்வாறு கல்வியமைச்சரைக்கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஊரதீவு திருவள்ளுவர் கழகத்தலைவர் திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற கழகக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## டாக்டர் ராஜினாமா

கோட்டை. செவ்வாய்

உலக சுகாதார ஸ்தாபனத்தில் உபகாரச்சம்பளம் பெற்றதனைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியான டாக்டர் ஆனந்த ஜயதிலகா தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

## 24-ந் திகதி திறக்கப்படும்

மாவிட்டபுரம் செவ்வாய்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உலோக ஆய்வுகூடம் இம்மாதம் 24ம் திகதி கல்வி இலாகாவின் மேலதிக நிர்த்தசக் காரியதரிசி திரு சுமதிபாலாவினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரிப் பதில் அதிபர் திரு எஸ். சோமசுந்தரம், ஆசிரியர்கள் திரு எஸ் தாமோதரம்பிள்ளை. திரு பரஞ்சோதி, திரு துரைசிங்கம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பாவம் புரிவது மனித இயல்பு. ஆனால் மனிதன் பாவம் புரிவது நிச்சயம் என்பது ஒருபுறமிருக்க, அவனை மீட்பதற்கான வழிகளை இறைவன் ஆக்கிவைக்கிறார் என்பது இருமடங்கு நிச்சயமாக உள்ளது.

—பரமஹம்ஸர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 9-ந் திகதி (23-6-71)


## இரட்டைப் பிரச்னைகள்

அரசாங்க ஊழியர்களின் அலுவலகநேரத்தில் மாறுதல் செய்யப்பட்டிருப்பதை வரவேற்றும் இந்த மாறுதல் மூலம் அரசாங்க ஊழியர் மத்தியில் திறமையும் கட்டுப்பாடும் அதிகரிக்குமென நம்பிக்கை தெரிவித்தும் இரண்டு தினங்களுக்குமுன் இதே பகுதியில் எழுதியிருந்தோம். இதே சமயம் அரசாங்க ஊழியர் தமது கடமையைச் செய்வதில் அவர்களுக்குள்ள பிரச்னைகளையும் நாம் அறியாமலிருக்கவில்லை.

அரசாங்கத் துறையைப் பொறுத்தவரையில் ஒன்றோடொன்று இணைந்துள்ள இரண்டு முக்கிய பிரச்னைகளுக்குத் தாமதம் இன்றித் தீர்வுகாண அரசாங்கம் முன்வரவேண்டும். ஒன்று திடீர் திடீரென அரசாங்க ஊழியர் வேலைக்குவராமல் நின்றுவிடுவது மற்றது உற்பத்திக்குறைவு. உற்பத்தித்திறன் என்றால் ஊழியர்களின் திருப்தி என்பது அதன் அர்த்தமாகும்.

ஊழியர் திருப்தியடையாமலிருந்தால் உற்பத்தியும் தரமும் குறைவாக இருக்குமென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். பயங்கரவாத இயக்கம் தலைதூக்கியபோது நாம் பார்த்ததுபோல் நெருக்கடியான காலத்திலும் மற்றும்நேரத்திலும் கஷ்டங்களையும் தொல்லைகளையும் பொருட்படுத்தாது தங்கள் கடமையையே பெரிதாக கருதி அதற்கென்றே தம்மை அர்ப்பணிப்பவர்கள் மிகமிகக் குறைவு என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அரசாங்கத் துறையில் ஊழியரின் நிலைமுன்னேற்றம் காணப்பட்டால் தான் வேலையும் சிறப்பாக இருக்கும் உற்பத்தியும் அதிகரிக்கும், ஒழுங்காக ஊழியர்கள் வேலைக்கும் வருவர்.

ஊழியர்கள் திடீர்திடீரென வேலைக்கு வராமல் விடுவதே வேலைகள் ஒழுங்காக நடைபெறாததற்கும் வேலைகள் பாதிக்கப்படுவதற்கும் முக்கிய காரணமாகும். எனவே வேலைக்குத் திடீரென வராமல் விடும் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

நீண்ட தூரத்திலிருந்து அலுவலகங்களுக்கு வரவேண்டிய ஊழியர்கள் தனிப்பட்ட, சமூகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் குறைந்தவர்கள். நம்பிக்கையற்ற பற்றாக்குறையான போக்குவரத்து வசதியும் ஊழியர்கள் அடிக்கடி வேலைக்கு வரமுடியாமல் போவதற்குக் காரணம் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆயிரக்கணக்கான அரசாங்க ஊழியர்கள் ஐம்பது மைல் தொலைவிலிருந்து தமது அலுவலகங்களுக்கு வந்து சேரவேண்டியிருக்கிறதாம். அரசாங்க ஊழியர்களில் பலரும் தமது காலைக் கடன்களைத் தமது அலுவலகத்துக்கு வந்தே முடித்துக்கொள்ளவேண்டியிருப்பது ஆச்சரியமானதொன்றாலும் உண்மைதான்!

அலுவலக நேரத்தில் மாறுதல் செய்தபோது ஊழியர்களை எதிர்நோக்கும் கஷ்டங்களை அரசாங்கம் உணர்ந்துகொள்ளாமலில்லை. ஆனாலும் ஆற்றல் எந்த அளவுக்கு அதிகரிக்கும் என்பது போகப்போகத்தான் தெரியும்! அரசாங்க ஊழியர் தமது அலுவலகத்துக்கு முப்பது மைல் எல்லைக்குள் வசிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் மற்றொரு நிபந்தனை. ஒழுங்காக, உரிய நேரத்தில் ஊழியர் அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டுமென்பதே இதன் நோக்கம். இது எந்த அளவுக்குச் சாத்தியம் என்பதைச் சொல்ல முடியாது.

தலைநகரிலும் அதைச் சூழவுமே அரசாங்க அலுவலகங்கள் யாவும் குவிந்து வைக்கப்பட்டுள்ளதும், இங்கு குடியிருப்புப் பிரச்னை பெரிதாக இருப்பதுமே அரசாங்க ஊழியர் பலரும் தூர இடங்களில் வசிப்பதற்கும் காரணங்களாகவிருக்கின்றன.

இப் பிரச்னைக்குப் பரிகாரம் காணவேண்டும். அரசாங்க அலுவலகங்களை இதர மாகாணங்களுக்கும் மாற்றி நிர்வாகத்தைப் பரவலாக்குவது இப்பிரச்னைக்குப் பரிகாரம் காண்பதற்கு ஓரளவாவது உதவ மாட்டாதா.

ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும் தங்கள் சொந்த ஊரிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் வேலைசெய்வது அப்பகுதி சமூக, கலாசார வாழ்க்கைக்கு ஓரளவு பயன்படுமென்பது உண்மையே.

காலையில் போக்குவரத்து நெருக்கடியேற்படுவதற்கு வெளியூர்களிலுள்ள பாடசாலைப் பிள்ளைகள் தமது ஊர்களிலுள்ள பாடசாலைகளை விடுத்து வெளிப்பட்டினங்களிலுள்ள பெரிய பாடசாலைகளுக்குச் செல்வதும் ஒரு காரணமாகும்.

இவை அடிப்படைப் பிரச்னைகளாகும். பிரச்னைகளைத் தெரிந்து உணர்ந்துகொண்டால் மட்டும் போதாது அவற்றுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோயில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இரத்தம் உறைதலைத் தடுக்கும் காலுறைகள்

லண்டன், ஜூன் 22

மாரடைப்பின் ஒரு முக்கிய காரணம் இரத்தம் உறைதல் என்று வைத்தியர்கள் இன்று கண்டுபிடித்திருக்கின்றனர். பிரசவித்த அல்லது பிரசவிக்கப்போகும் பெண்களையும் பெரிய சத்திர சிகிச்சைக்குள்ளானோரையும் எதிர்நோக்கும் மிகப் பெரிய அபாயம் இந்த இரத்தம் உறைதல் தான்.

சத்திர சிகிச்சையின் பின் அல்லது பிரசவத்தின் பின் உடலில் இரத்தமானது மிகவும் குறைந்த அளவில் இருக்கும் பொழுதுதான் இவ்வபாயம் ஏற்படுகிறது. இரத்தமானது உடலில் நரம்புகள் மூலமாக எக்கணமும் பாய்ந்துகொண்டிராமல் ஓரிடத்தில் சிறு விநாடி தங்கிவிட்டதும் இந்த இரத்த உறைவு ஏற்படுகிறது. பொதுவாகக் கீழ்க்காலில் தான் இரத்தம் இலகுவில் உறைந்து கட்டியாகிவிடுகிறது. இரத்தம் இப்படி உறைவதால் உடலின் சகல பாகங்களிலும் பாய்ந்து தடையின்றிச் செல்ல முடியாமல் போய்விடுகிறது. இதனால் மாரடைப்பும் பின் மரணமும் ஏற்படுகிறது.

சத்திர சிகிச்சைகளின் பின்பு, இப்படி இரத்தம் உறைதலைத் தடுக்குமுகமாக மேற்கு லண்டன், ஹமர்ஸ்மித் வைத்தியசாலையிலுள்ள வைத்தியர்கள் ஒரு புதுமையான காலுறைகளை அமைத்துள்ளனர். சத்திரசிகிச்சைக் கூடத்திற்குள் எடுத்துச் செல்லப்படுமுன் இக்காலுறைகள் நோயாளிக்கு அணிவிக்கப்படுகிறது.

காற்றடைக்கப்பட்ட இக் காலுறைகள், ஒரு நிமிடத்துக்கு மூன்று தடவைகள் என்ற ரீதியில் கால்களை அழுத்தி, இரத்தம் ஓரிடத்தில் தங்கிவிடாமல் பாதுகாக்கின்றன. உடல் முழுவதும் இரத்தம் தடையின்றிப் பாய இந்தக் காலுறைகளின் அழுத்தம் பெரிதும் உதவுகின்றது. சத்திர சிகிச்சையின் போதும், பின் உடல் நலம் பெற்று, நோயாளி தானாக எழும்பி நடமாடக்கூடிய நிலை வரும் வரை இக்காலுறைகள் பாவிக்கப்படுகின்றன

## சுருப்பிலி விலை கூடியதினால் ஏற்றுமதி தடை!

அரியாலை, செவ்வாய்

சுருப்பிலியின் கொள்விலை விஷம்போல் அதிகரித்து வருவதினால் சுருப்பிலித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதனால் சுருப்பிலி ஏற்றுமதியும் தடைப்பட்டுள்ளது.

சுருப்பிலித் தொழிலில் தனிப்பட்டவருக்கும், சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட போட்டியின் காரணமே இந்தவிலை ஏற்றத்துக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

தனிப்பட்டவர்களின் போட்டியையும் தாண்டி வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் பெருந்தொகையான சங்கை ஏற்றுமதிசெய்து வருகிறது ஆயினும், சுருப்பிலியைப் பொறுத்தமட்டில் அதிக அளவு அந்நிய செலாவணியைச் சேமிக்கமுடியாமலிருப்பதினால் சுருப்பிலி ஏற்றுமதியை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளதாக மேற்படி சமாசம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தில் 72 கடற்றொழிலாளர் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

## தாதிப் பயிற்சியைத் திட்டமிடும் கம்பியூட்டர்

லண்டன், ஜூன் 22

தாதிகளாகச் சேவை செய்ய விரும்புவோர் வருடப்பயிற்சியைப் பெறவேண்டியது அவசியம். இப்பயிற்சியானது ஒவ்வொரு நாட்டின் தேவைகளையும் அனுசரித்து மாறுபடுகிறது. இப் பயிற்சித் திட்டத்தை மிக நுணுக்கமாகத் திட்டமிடல் அவசியம்.

இப்பொழுது பிரிட்டனிலுள்ள ஒரு வைத்தியசாலையில் இத்தாதிகளுக்கான பயிற்சித் திட்டத்தை ஒரு கம்பியூட்டர் வகுத்துக் கொடுக்கிறது. சமீபத்தில் எழுபது தாதிப் பயிற்சியாளரின் பயிற்சித் திட்டத்தை இக்கம்பியூட்டர் மிக எளிதாக வகுத்துக் கொடுத்து விட்டது.

பயிற்சியின் இறுதியில் எடுக்க வேண்டிய பரீட்சைக்கு அவசியமான தராதரங்கள் ஒரு வைத்தியசாலையின் தாதித் தேவைகள் தாதிகளின் பணியைப் பொறுத்தவரை வைத்தியத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றிய சகல தகவல்களும் இக்கம்பியூட்டரிடம் கொடுக்கப்படுகின்றன. கம்பியூட்டர் இத்தகவல்களைப் பகுத்தாய்ந்து இன்றைய வைத்தியசாலைகளின்தேவைகளுக்கொப்ப தாதிகளின் இரண்டு அல்லது மூன்று வருடப் பயிற்சி அட்டவணையைத் தயாரித்து விடுகிறது.

இப்புரட்சிகரமான கம்பியூட்டரை இப்பொழுது பிரிட்டனிலுள்ள பல முக்கிய [illegible] பாவிக்கத் தொடங்கியுள்ளன.

## 'அழகிய இதயமும் கடமை உணர்ச்சியும் உடையவர்'

பருத்தித்துறை, செவ்வாய்

"அழகிய இதயமும் கடமை உணர்ச்சியும் படைத்த ஆசிரியர்—மாணவர், சக ஆசிரியர் பெற்றோர் ஆகியோரின் ஆழ்ந்த அன்பைப் பெறுவரென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் திரு வீ. மாணிக்கம் பிரமசாரியாகவே வாழ்ந்து இறந்த இவர், தமது நேரத்தின் பெரும் பகுதியையும், பணத்தையும் மாணவரின் நன்னுக்குச் செலவிட்டார். சம்பளத்துக்காகவன்றிக் கலைக்காகக் கடமைசெய்யும் விரல்விட்டெண்ணக்கூடிய ஆசிரியரின் முன்னணியில் திகழ்ந்தவர் திரு. மாணிக்கம்'

இவ்வாறு நேற்றுமுற்பகல் அகால மரணமடைந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வரைதல் ஆசிரியர் திரு வீ. மாணிக்கத்தின் மறைவு குறித்துப் பேசிய மேற்படி கல்லூரி அதிபர் திரு க சிவசிதம்பரம் கூறினர் திரு எஸ் சின்னத்தம்பி உட்பட வேறுசிலரும் பேசினர்

திரு மாணிக்கத்தின் மறைவுகுறித்து கல்லூரி நேற்று மூடப்பட்டது

## "ஊழல்களை ஒழிக்க உதவவேண்டும்"

பருத்தித்துறை, செவ்வாய்

"சமுதாயத்தில் நிலவும் கைலஞ்சம் கள்ள மார்க்கட் பதுக்கல் ஆகிய சமூக விரோத சக்திகளை ஒழித்துக்கட்ட முன்வரவேண்டியது ஒவ்வொரு முற்போக்காளனின் கடமையாகும். எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்த்துக் குறைகூறுவதை விடுத்து, அரசாங்கம் விநியோகிக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய வழிகளைச் செய்வதே சிறந்த பணியாகும்."

இவ்வாறு பருத்தித்துறை நகரசபை உப-தலைவர் திரு. கே. சேனாதிராசா நேற்று மாலை துன்னாலையில் நடந்த முற்போக்கு வாலிபர் சங்க ஆரம்பக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். திரு. கே. எஸ், சிதம்பரநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திருவாளர் எஸ் செல்லையா, நா. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர்.

அரசாங்க ஊழியரின்

## மதிய உணவு நேரம்

கோட்டை, செவ்வாய்

அரசாங்க ஊழியரின் மதிய போசன நேரத்தை முற்றாக இல்லாமற் செய்யவேண்டும் அல்லது அதை அரை மணித்தியாலமாகக் குறைக்கவேண்டும் என அரசாங்கத்துறை தொழிற்சங்கங்கள் அரசாங்கத்தைக் கோரவுள்ளன.

கல்வியமைச்சின் தொழிற்சங்கங்களின் இணைப்புச்சபை பிரமுகர் ஒருவர் மேற்படி தகவலை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கோரிக்கையை அரசாங்கம்நிறைவேற்றினால் அரசாங்க ஊழியர் அரை மணித்தியாலம் அல்லது ஒரு மணித்தியாலம் முன்னதாகச் சென்று தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைகளிலிருந்து கூட்டிச் செல்ல உதவுமெனவும் மேற்படி சங்கங்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

## அரசியல் நிர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்பட்டுள்ளதென்றும் தமிழரசுக்கட்சியினர் இதர தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப்பெற முயற்சி செய்து அதுவும் முடியாவிட்டால் சொல்லவேண்டியதை சபையில் சொல்லிவிட்டுக் கடைசிநேரத்தில் வெளியேறலாமென்று அபிப்பிராயம் கொண்டிருப்பதாகவும் தமிழரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் மொழி உரிமை சம்பந்தமாகப் பிரதமரையும் சந்தித்துப்பேசியபின் அவர் தமது கோரிக்கைக்கு இணங்க மறுத்தால் அதன்பின் வெளியேறுவது என்ற யோசனை இருப்பதாகவும் அறியப்படுகிறது.

## அனாதரவான...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

அதேநேரத்தில் இறந்தவருக்கு அருகில் நச்சுத்திராவகப் போத்தல் காணப்பட்டதாகவும் சடலம் கிடந்த இடத்திற்கு அருகே இரத்தக்கறை காணப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

விசாரணை நடாத்திய சாவகச்சேரி நீதிபதி திரு. எஸ். ஆசீர்வாதம் பிரேதத்தைப் புதைக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து சடலம் அடக்கம்செய்யப்பட்டது.

இது ஒருகொலையாயிருக்குமெனக் காங்கேசன்துறைப் பொலிசார் நம்புகின்றனர். உண்மையைக்கண்டறிவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org